# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2011 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, நொத்தாரிசுகள் (திருத்தச்) சட்டம்*

---

*(2011 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2011*, நவெம்பர் மாதம் 25 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *4.00*** **தபாற் செலவு : ரூபா *10.00***

## 2011 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, நொத்தாரிசுகள் (திருத்தச்) சட்டம்

[2011 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.-ஓ. 17/2011

## நொத்தாரிசுகள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கான தொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தி னால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம், 2011 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, நொத்தாரிசுகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (107 ஆம் அத்தியாயமான) நொத்தாரிசு கள் கட்டளைச் சட்டத்தின் 31 ஆம் பிரிவு அதன் (16) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது : *107 ஆம் அத்தியாயத்தின் 31 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

"(16) (அ) அவர், உறுதி அல்லது சாசனம் அதன்கண் அல்லது அதனுடன் இணைக்கப்பட்ட அட்டவணையொன்றில் மேற்கூறிய காணியின் அல்லது அதனால் பாதிக்கப்பட்ட வேறு ஆதனத்தின் எல்லைகளையும், பரப்பளவையும், மாவட்டம், பற்று, கோறளை, பிரதேசச் செயலாளரின் பிரிவு, உள்ளூர் அதிகாரசபைப் பிரிவு, கிராம அலுவலரின் பிரிவு அத்துடன் கிராமம் மற்றும் காணி அமைந்திருக்கும் மாவட்டம், அத்துடன் காணி முறையே (252 ஆம் அத்தியாயமான) மாநகரசபைக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ், நகரசபைகள் சட்டத்தின் 2ஆம் பிரிவின்கீழ், 1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேசச் சபைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் மாநகரசபை எல்லையில், பட்டினத்தில் அல்லது அபிவிருத்தி செய்யப்பட்ட இடப்பரப்பில் அமைந்திருக்கும் விடயத்தில் வரி மதிப்பீட்டிலக்கம், அது அமைந்திருக்கும் தெருவின் பெயர், எதுவுமிருப்பின் என்பவற்றைக் காட்டும் செம்மையானதும் தெளிவானதுமான விவரணமொன்று உள்ளடக்கப்பட்டிருந்தாலன்றி ஒரு இறுதி விருப்பாவணத்தை அல்லது இறுதிவிருப்பாவணப் பின்னி

2-PL 006244 -1115 (2011/09)

ணைப்பைத் தவிர காணியை அல்லது வேறு அசைவற்ற ஆதனத்தைப் பாதிக்கும் ஏதேனும் உறுதியை அல்லது சாசனத்தைச் சான்றுறுதி செய்தலாகாது.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவு அதன் (26) ஆம் உட்பிரிவில் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியை அதன் (அ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்தியாக மீளவிலக்க மிடுவதன் மூலமும் ;

(2) மீளவிலக்கமிடப்பட்ட பந்தி (அ) என்னும் (i) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்து வதன் மூலமும் :-

"(ii) மேலே (i) ஆம் உட்பந்தியின்கீழ் தயாரிக்கப்பட்ட நிரலின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று ஆணையாளருக்கு அல்லது அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணி அமைந்துள்ள இடத்தின்மீது அதிகாரமுள்ள முறையேயான உள்ளூரதிகாரசபையின் செயலாளருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.".

*இரண்டாம் அட்டவணையின் படிவம் "ஊ" என்பதனை மாற்றீடு செய்தல்.*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்திற்கான இரண்டாம் அட்டவணை அதன் படிவம் "ஊ" என்பதில் மேற்கூறப்பட்ட படிவத்தின் நிரல் 6 என்பதற்கான தலைப்புக்குப் பதிலாக, "உறுதியிலுள்ள ஆதனம் ஒவ்வொன்றினாலும் பாதிக்கப்பட்ட உள்ளூரதிகாரசபையினது பெயர்" என்னும் தலைப்பை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**5.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்